Salaries of Aided School Teachers in Udangudi Panchayat Union

* 462 *Q*.—THIRU T. MARTIN : Will the Hon Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the teachers working in private aided elementary schools within the jurisdiction of the Udangudi Panchayat Union Council in Tiruchendur taluk, Tirunelveli district were paid their salaries for the month of October 1969; and

(*b*) if not, when will they be paid their salary?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம், மானியம் பெறும் தனியார் தொடக்கப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் 1969 ஆண்டு அக்டோபர் திங்களுக்கான சம்பளம் (21----9----1969 முதல் 20—10—1969 வரையிலான கால அளவுக்குரியது) 6---11---1969 அன்று கொடுக்கப்பட்டது.

(இ) இவ்வினா எழவில்லை.

THIRU T. MARTIN : Sir, teachers working in these private-aided institutions within the jurisdiction of the Udangudi Panchayat Union, Sathankulam Panchayat Union and the Radhapuram Panchayat Union which are all situated in the backward areas, are not regularly paid their salaries every month and every time the Panchayat Union has to approach the Government for special loans. So, may I reuest the Hon. Minister to state whether the Government have taken any definite step to ease the situation and see that the teachers are paid their salaries every month?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கனவே இதுபற்றி மன்றத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். பொதுவாக கல்வி நிதியிலிருந்து நிதியை எடுத்து ஊராட்சி ஒன்றியங்கள் வேறு காரியங்களுக்காகப் பயன்படுத்துகிறது என்ற சில குறைபாடுகள் நமது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதன் பேரில், கல்வி நிதிக்காக ஒதுக்கப்படுகிற தொகைக்கு தனிக் கணக்கு வைத்துவர வேண்டுமென்று ஆணை பிறப்பித்திருக்கிறோம். பணம் போதாத நேரத்தில் பொது நிதியிலிருந்து கல்வி நிதிக்குக் கொடுக்கக்கூடிய உத்தரவுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. என்றாலும், சில குறிப்பிட்ட ஊராட்சி ஒன்றியங்கள் பொதுநிதியைப் பெற முடியாத அளவிற்கு மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கின்றன. அப்படி எந்தெந்த ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன என்பதைக் கண்டறிந்து, எந்த வகையிலே அவற்றை அபிவிருத்தி செய்யலாம் என்பதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவின் அறிக்கை விரைவிலே கிடைக்கும். அப்படிக் கிடைத்தவுடன் முறையாக சம்பளம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றாலும்கூட, அவ்வப்போது சங்கடங்கள் எழுகின்ற நேரத்தில் உடனுக்குடன் தந்தியின் மூலமாக சம்பளம் வழங்க தேவையான ஆணைகள் வழங்கப்படுகின்றன. நவம்பர், டிசம்பர் திங்களுக்கான சம்பளத்தை 1----12----1969-லும், 8—1—1970-லும் முறையே வழங்கப்பட்டிருக்கிறது. இந்த மாதிரியான குறைகள் அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறது. இதைப் போக்க எல்லாவித முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

Share capital to Primary Land Development Banks

*463 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether the Government is contributing towards share capital to the Primary Land Mortgage Banks in the State; and

(b) if so, how much?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: (அ) ஆம்.

(இ) புதிதாகத் திறக்கப் பெற்ற 60 வட்டார நிலவள வங்கிகளுக்கு, பங்கு மூலதன உதவியாக தமிழக அரசு ரூ. 15 லட்சம் வழங்கியுள்ளது.

திரு. கே. விநயகம்: தலைவர் அவர்களே, இப்படி அரசாங்கத்தினல் 15 லட்சம் ரூபாய் மூலதனமாகத் தரப்பட்டிருக்கிறதே, இது அரசாங்கத்தினுடைய பங்காக இருந்தால் அவர்களுடைய மொத்த கேபிடல் எவ்வளவு இருக்க வேண்டும்? அதை வைத்துக்கொண்டு எவ்வளவு அளவிற்குக் கடன் கொடுக்க முன்வந்திருக்கிறது? அதற்கு அரசாங்கம் உதவி செய்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவர் அவர்களே, அந்தந்த வட்டாரத்தில் பொதுமக்கள் எவ்வளவு பங்குத் தொகை முதலீடு செய்கிருர்களோ, அதற்கு மேற்படாமல் அந்த வங்கிக்கு, அரசு 25 ஆயிரம் ரூபாய் வரை மூலதனம் வழங்குகிறது. பொதுமக்கள் 25 ஆயிரமும், அரசு 25 ஆயிரமும் சேர்ந்து 50 ஆயிரம் மூலதனமாக உள்ள அந்த வங்கிக்கு, 10 லட்சம் ரூபாய் வரையில் கடன் வழங்க சக்தி இருக்கிறது.

திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்: தலைவர் அவர்களே, தொடக்க நிலவள வங்கி ஆரம்பித்ததிலே சர்க்கார் மேற்கொண்ட நடைமுறைத் திட்டம் என்ன? வட்டாரத்திற்கு ஒரு வங்கி என்று ஏற்படுத்துவதற்கு எவ்வளவு காலம் பிடிக்கும்? ஏற்கெனவே இயங்கி வருகிற, தாலுக்காவுக்கு ஒரு நில அடைமான வங்கி என்று இருந்துவருகிற வங்கியின் வருங்கால நிலைமை என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவர் அவர்களே, 24---3---1969 அன்று, அதாவது ஒரு வருடத்திற்கு முன்னல், இப்பேரவையின் முன்னல் வெள்ளை அறிக்கை ஒன்று வைக்கப்பட்டு, ஒரு வட்டாரத்திற்கு ஒரு நிலவள வங்கி என்ற கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. பழைய வங்கிகளின் நிலைமைப்பற்றிக் கேட்டார்கள். பழைய வங்கிகளுக்கும் மூலதனமாகப் பணம் கொடுக்கிறோம். புதிய வங்கிகளுக்கு 15 லட்சம் ரூபாய் என்ருல் பழைய வங்கிகளுக்கு 21 லட்சம் ரூபாய் கொடுக்க இந்த அரசு முன்வந்திருக்கிறது. இந்த மூலதனப் பணம் எல்லாம் ரிசர்வ் பாங்கியிலிருந்து பெறப்படுகிறது. ரிசர்வ் பாங்க் மிகவும் குறைந்த வட்டிக்கு அரசுக்குப் பணம் கொடுக்கிறது. முதல் இரண்டு வருஷத்திற்கு வட்டி கிடையாது. அடுத்து மூன்று வருஷத்திற்கு இரண்டு சதவிகிதமும், அதற்குப் பிறகு நான்கு வருஷத்திற்கு 2½ சதவிகிதமும், அதற்குப் பிறகு மூன்று வருஷங்களுக்கு மூன்று சதவிகிதமும் என்ற அளவில் ரிசர்வ் பாங்க் கொடுக்கின்ற பணத்தை முதலீடு செய்வதன்மூலம் அரசுக்கு வருவாய் இருக்கிறதே தவிர, செலவு இருக்காது.